ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®

ECHOES இந்தியா செய்திமடல்

# பூஜ்ய பாபூஜி மகராஜின் 116-வது பிறந்த நாள் விழா கொண்டாட்டங்கள்




## முதல் அறிவிப்பு

2015, 12 ஜனவரி அன்று, மரியாதைக்குரிய கம்லேஷ் பாய், பூஜ்ய பாபூஜி மகராஜின் பிறந்த நாள் விழா, லக்னௌ (உ.பி)வில் 2015 ஏப்ரல் 29 முதல் மே 1 வரை நடைபெறும் என சகஜ் சந்தேஷ் வாயிலாக உலகமெங்கும் உள்ள அப்யாசிகளுக்கு அறிவித்து, அதிக அளவில் அனைவரும் ஒன்று கூட வேண்டும் என வலியுறுத்தினார்.

## முன்னேற்பாடுகள்

லக்னௌவில் விழா நடைபெறப்போவதாக அறிவிக்கப்பட்டவுடன் விழாவுக்கான முன்னேற்பாடுகள் செய்யும் பணிகள் தொடங்கின. 2010 ல் அன்புக்குரிய சாரிஜி அவர்களின் பிறந்த நாள் விழா நடந்து, ஐந்து ஆண்டுகால நீண்ட இடைவெளிக்குப்பிறகு மீண்டும் ஒரு விழா நடத்த மிகுந்த ஆவலுடன் கூடிய எதிர்பார்ப்பு அங்கு நிலவியது.

விழா குழுவினர் முன்னேற்பாடு குறித்த சுற்றறிக்கையினை அனுப்பத்தொடங்கினர், விழாவுக்கான முன்பதிவுகள் செய்வது தொடங்கப்பட்டது, அனைவருக்கும் அடிப்படை வசதிகள் வழங்கவும், விழாவில் சிறப்பான ஆன்மீக சூழலில் அவர்களை மூழ்கச்செய்யவும் தன்னார்வத்தொண்டர்களின் குழுக்களை அமைத்தனர்.

ஒரு சிறிய ஆனால் அர்ப்பணிப்பு உணர்வு கொண்ட தன்னார்வத்தொண்டர் குழுவினர் விழா நடைபெறும் இடத்தில் சோர்வின்றி வேலை செய்தனர். கம்லேஷ் பாய் ஏப்ரல் 15ம் தேதி, முன்னேற்பாடுகளை மேற்பார்வையிடுவதற்காக லக்னௌ ஆசிரமத்திற்கு வருகைபுரிந்து மைதானம் முழுமையும், சமையல் அறை, பொது தங்குமிடங்கள், கூடுதல் வசதிகள் கொண்ட தங்குமிடங்கள், சிற்றுண்டிச்சாலை, புத்தகங்கள் விற்பனைக்கூடம், மருத்துவ மையம், சிறுவர்கள் மையம், மற்றும் அமைக்கப்பட்டுக்கொண்டு இருந்த மற்ற பிரிவுகள் உட்பட அனைத்தையும் சுற்றிப் பார்த்தார். முன்னேற்பாடு பணிகளின் முன்னேற்றத்தினைக் கண்டு மகிழ்ச்சியடைந்தார், மேலும் செம்மைப்படுத்த ஆலோசனைகளை வழங்கினார்.

## விழாவிற்கு மாஸ்டரின் வருகை

கம்லேஷ் பாய் விழாவில் கலந்து கொள்வதற்காக ஹைதராபாத்தில் இருந்து லக்னௌவுக்கு ஏப்ரல் 27ம் தேதி பிற்பகல் வந்துசேர்ந்தார். அவரை அன்புடனும், விழா குறித்த அதிக எதிர்பார்ப்புடனும் வரவேற்றனர்.

அவர் 27 ம்தேதி மாலை சத்சங்கத்தினையும், 28ம் தேதி இரண்டு சத்சங்கங்களையும் நடத்தினார். 28ம் தேதி காலை மூன்று மணி நேரத்திற்கும் மேலாக சிற்றுண்டிச்சாலைக்கான வில்லைகளை மாஸ்டர் விநியோகிப்பதைப் பார்த்த அப்யாசிகள் இனிமையான ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர். ஒவ்வொருவரும் அவரிடம் வில்லைகளைப் பெறுவதற்காக வரிசையில் நின்றனர். அன்று அவர் ஐந்து திருமணங்களை நடத்திவைத்தார்.



## வளாகம்

மிகப் பெரிய அளவிலான ஏற்பாடுகள் பரந்த அளவில் செய்யப்பட்டிருந்தன. ஒரு பகுதியில் பதிவு செய்தல், படுக்கைகள் வழங்குதல், அப்யாசிகள் தங்கும் குடில்கள் மற்றும் சமையலறை, உணவுக்கூடம் ஆகியவை இருந்தன. தியான கூடத்திற்கு செல்லும் வழியில் குடிநீர், புத்தக விற்பனைக்கூடம், நன்கொடை, வங்கி சேவை, மற்றும் பலவகையான சிற்றுண்டிகளைக் கொண்ட ஒரு விசாலமான உணவகம் ஆகியவை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. குழந்தைகள் மையம், உணவகத்தை அடுத்து, தியான கூடத்திற்கு செல்லும் வழியில் இருந்ததால் குழந்தைகளை அங்கு விட்டு வருவதற்கு அப்யாசிகளுக்கு சுலபமாக இருந்தது. அப்யாசிகள் தங்கும் இடங்களிலிருந்து, தியானக் கூடத்தின் நுழைவாயில் வரை செல்வதற்கு, போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டிருந்தன. சுக் நிவாஸ் என்று அழைக்கப்படும், வசதிகளுடன் கூடிய தங்குமிடம், தியான கூடத்தின் ஒரு பகுதியில் சிறிய உணவு விடுதியுடன் அமைக்கப்பட்டிருந்தது. மாஸ்டரின் குடில் மற்றொரு பகுதியில் இருந்தது.

புத்தக விற்பனைக்கூடம் இருந்த, விசாலமான, மிகப்பரந்த அளவிலான பகுதியில், புகைபடங்களும் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. இந்தப்புதிய அணுகு முறை நல்லதொரு அனுபவமாக இருந்தது. விற்பனைக் கூடத்தைச் சுற்றி வந்து, ஒரு விற்பனை நிலையத்திலிருந்து மற்றொன்றுக்குச் சென்று, தனக்கு விருப்பமுள்ள புத்தகம், குறுந்தகடுகள், ஒலித்தகடுகள் ஆகியவற்றைத் தேர்ந்தெடுக்க முடிந்தது. முதல் முறையாக அமைக்கப்பட்டிருந்த மையப்படுத்தப்பட்ட 10 பணம் செலுத்தும் முகப்புகளில் ஏதாவதொன்றில் பணத்தை ரொக்கமாகவோ அல்லது கடன் அட்டை மூலமாகவோ செலுத்தலாம். கடன் அட்டைமூலம் தொகை செலுத்துவதில் சில இடையூறுகள் இருந்தபோதிலும், இப்புதிய அணுகுமுறை, அனைவருக்கும், வாங்கும் அனுபவத்தைக் கண்டிப்பாக மேம்படுத்தியது.

## தியானக் கூடம்

மிகவும் ஈர்க்கக்கூடிய ஒன்றாக, 1,54,000 சதுர அடியில், பிரம்மாண்டமான தியானக்கூடம் அமைக்கப்பட்டிருந்தது. கூடத்தின் ஒரு பக்கத்திலிருந்து மறு பக்கம் வரை, ஒவ்வொரு 130 அடி இடைவெளிக்கும், தூண்களே இல்லாமல், சிறப்பான ஜெர்மன் தொழில்நுட்பத்துடன் கட்டப்பட்டிருந்ததால், அப்யாசிகள் மேடை முழுவதையும் எந்தவிதமான தடையுமின்றிக் காண முடிந்தது. ஒரு மேடை மற்றும் நிறைய LED திரைகள் போடப்பட்டிருந்ததால், அப்யாசிகள் நிகழ்ச்சிகளை வசதியாகக் காண முடிந்தது. தரையில் அமர்ந்து கொள்ள விரும்பியவர்களுக்கும், தங்களது சொந்த நாற்காலிகளை எடுத்துக்கொண்டு வந்தவர்களுக்கும், தனித்தனியான பகுதிகள் இருந்தன. மேலும், மிகப்பெரிய பகுதியில், நிறைய நாற்காலிகள், அவற்றைப் பயன்படுத்த விரும்பியவர்களுக்காகப் போடப்பட்டிருந்தன. இச்சமயத்தில், லக்னோவில் உள்ள வெப்பத்தைக் கவனத்தில் கொண்டு, கூரை அமைக்கப் பயன்படுத்திய, பிரத்தியேகமான பிவிசி தகடுகள், தியானக் கூடத்தில் வெப்பத்தைத் தணித்ததோடல்லாமல், தண்ணீர் உள்ளே புகாமல் தடுக்கக் கூடியதாகவும் இருந்தன. கூடம் முழுவதும் இருந்த கூரை மின்விசிறிகளும், பக்கங்களில் இருந்த மின்விசிறிகளும், தியானத்திற்கான இதமான சூழலை உருவாக்கின.

## தன்னார்வலர்கள்

அர்ப்பணிப்புடன் கூடிய தன்னார்வலர்கள் குழு இல்லையெனில், ஒரு விழாவை நடத்தமுடியாது.







எல்லா வயதைச் சேர்ந்த தன்னார்வலர்களும், போக்குவரத்து, சுகாதாரம், தியானக்கூடம், பாதுகாப்பு, மருந்தகம் போன்ற பல்வேறு செயல்பாடுகளில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த பண்டாராவில் சுவாரசியமான மாறுதலாக, கருப்பொருளை மையமாகக் கொண்ட சுற்றுப்பட்டைகளை தன்னார்வத் தொண்டர்கள் தங்கள் மேல்கையில் அணிந்திருந்தனர். 'பணிவு' என்று எழுதப்பட்டிருந்த சுற்றுப்பட்டையை பாதுகாப்பு பிரிவில் பணியாற்றிய தன்னார்வத் தொண்டர்களும், 'சேவை செய்' என்ற எழுத்துக்களுடன் இடங்களை சுத்தமாக பராமரிக்கும் தன்னார்வர்களும், 'அன்பு' என்று மருத்துவத்துறைத் தொண்டர்களும், 'அமைதி' என்று தியான மண்டபத் தொண்டர்களும் அணிந்திருந்தார்கள்.

## பதிவுகள்

பண்டாராவில் 2800 குழந்தைகள் உள்பட, ஏறத்தாழ 20,000 மக்கள் ஒன்றுகூடியிருந்தார்கள்.

## விழா

ஏப்ரல் 29ம் தேதி காலை 6.30 மணி சத்சங்கத்துடன் விழா தொடங்கியது. அன்பிற்குரிய பாபூஜி ஒரு பக்கமும், 'புனிதமான அன்புடன் ஒற்றுமை' என்ற வார்த்தைகளையும் கொண்ட அழகான பின்னணி படம் மேடையை அலங்கரித்தது.

சத்சங்கத்திற்கு பிறகு, நிறைய குழந்தைகள் வரவழைக்கப்பட்டு, புதிய வெளியீடுகள், DVDக்கள், ஆடியோ புத்தகங்கள் வெளியிடப்பட்டன.

## மாஸ்டரின் முதல் உரை

பிரார்த்தனை, சுத்திகரிப்பு மற்றும் நிலையைத் தக்க வைத்துக்கொள்ளுதலின் முக்கியத்துவம் ஆகிய தலைப்புகளில் கமலேஷ் பாய் உரையாற்றி, அப்யாசிகளை களிப்புறச் செய்தார்.

- சகஜ மார்க்கத்தில், 'நாங்கள் இன்னும் ஆசைகளுக்கு அடிமைகளாய் இருக்கிறோம்' மற்றும் 'எங்களை அந்நிலைக்கு அழைத்து செல்லும் ஒரே தெய்வமும், சக்தியும் நீரே' என்று நாம் கூறுகிறோம். ஆகவே பிரார்த்தனையில், 'நான்' என்ற ஒருமையை பயன்படுத்தாமல், 'நாங்கள்' என்ற பன்மையை பயன்படுத்துகிறோம். ஆனால் நாம் பிரார்த்தனையை நமக்கு மட்டுமே கட்டுப்படுத்த முயற்சிக்கிறோம். பிரார்த்தனை எனக்காக மட்டுமல்ல, அது அனைவருக்காகவும்தான்.
- சுத்திகரிப்பில், கடினத்தன்மைகள் நீங்குகிறது என்று எண்ணி அமர்ந்திருக்கும்போது, அங்கு எளிமை எஞ்சியிருக்கிறது. அழுக்குகள் நீங்குகிறது என்று எண்ணி அமர்ந்திருக்கும்போது தூய்மை எஞ்சியிருக்கிறது.
- நிலை - ஒரு குழந்தையை தாய் தனது கர்ப்பத்தில் ஒன்பது மாதங்கள் சுமந்து பின் இந்த பௌதீக உலகிற்குள் சேர்ப்பதைப் போன்றுதான் மாஸ்டர் அப்யாசியை தனது மனதிற்குள் ஏழு மாதங்கள் சுமந்து, நம் ஆன்மீக தனித்துவத்தை தெய்வீக உலகில் சேர்க்கிறார். இறுதியாக அங்கு நாம் இணைகிறோம். அப்யாசிகள் தனக்குள் மாஸ்டருடன் நிரந்தர தொடர்பை தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்றும்



ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்® எக்கோஸ் இந்தியா செய்திமடல்



இதற்கு ஒழுக்கம் அவசியம் தேவை என்றும் கோரிக்கைவிடுத்தார்.

காலை 11மணி சத்சங்கத்திற்கு பின், ராம் சந்த்ராவின் படைப்புகளின் முழுத் தொகுப்பு, பாகம் 5 என்ற புத்தகத்தின் சிறப்பு பதிப்பு பற்றி அறிவிக்கப்பட்டது. இந்த புத்தகப் பதிப்பில், வெளியிடப்படாத கட்டுரைகள், 1940 லிருந்து 1970 வரையிலான பாபூஜி மகராஜின் கடிதங்கள், மற்றும் உரையாடல்களிலிருந்து எடுக்கப்பட்ட மேற்கோள்கள் ஆகியவை உள்ளன.

மாலை 5.30 மணி சத்சங்கத்திற்குப் பின், அன்பு, அப்யாசிகள் பயிற்சியை விட்டுச் செல்வதற்கான காரணங்கள், மாற்றத்தின் அவசியம் ஆகியவை குறித்து மாஸ்டர் பேசினார்.

- அன்பு மிக புனிதமானது. எனவேதான் அதனை பற்றிப் பேச தடை செய்யப்பட்டுள்ளது. அன்பு, அன்பர், அன்பிற்குரியவர் மட்டுமே அதனுள் இருக்க வேண்டும் என்று கூறினார்.
- அப்யாசிகள், சம்ஸ்காரங்களுடன், முன்னேற்றத்திற்கும், மாற்றத்திற்கும் தடையாக உள்ள "நான்" என்ற அகங்காரத்தையும் மிகப் பெரிய சுமையாக எடுத்து வருகின்றனர் என்றார்.
- மாற்றம் பற்றிப் பேசியபோது, நாம் முன்னேற வேண்டுமெனில், மாற்றத்தை வரவழைத்து, அதன்படி மாற வேண்டும் என்றார். நாம் மாற்றமடைவதை கடுமையாக எதிர்க்கிறோம். மாஸ்டரே நம்மை முன்னோக்கி அழைத்துச் செல்ல விரும்பினாலும், நாம் எங்கிருக்கிறோமோ, அங்கேயே இருக்கத்தான் விரும்புகிறோம். நமது ஏற்றுக்கொள்ளும் தன்மைக்கு ஏற்றவாறு தான், மாஸ்டர் நமக்குள் மாற்றத்தை ஆரம்பித்து வைக்க முடியும். மாற்றத்தை ஏற்றுக்கொள்வது அவ்வளவு எளிதல்ல என்பதால், மாற்றத்தை ஏற்றுக் கொள்ளும் வழி, சாதாரணமானவர்களுக்காக இல்லாமல், அசாதாரணமானவர்களுக்கே ஏற்புடையதாகும்.

## ஏப்ரல் 30, 2015

ஒரு புறம் அன்புக்குரிய பாபூஜி அமர்ந்திருப்பது போன்றும், மறுபுறம் ஒரு பறவை கூட்டம் பறப்பது போன்றும், "புனித அன்புடன் கூடிய ஒத்திசைவு" என்ற வாசகத்துடன் கூடிய காட்சி, மேடையின் பின்னணியாக மிக அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது.

காலை 6.30 மணி சத்சங்கத்திற்குப் பிறகு, சகோ. குர்ப்ரீத் சிங் இரு பக்தி பாடல்களை பாடினார். தியான கூடத்தில், பாபூஜியின் வாழ்க்கை வரலாற்று குறித்த திரைப்படத்தின் முதல் இரண்டு பகுதிகள் ஒளிபரப்பப்பட்டன. காலை 11 மணி சத்சங்கத்திற்குப் பின், சகோ. பி.ஆர்.கிருஷ்ணா, ஒளி உலகிலிருந்து மென்குரல்கள் சிறப்பு பதிப்பை வெளியிட்டார். அதில் அன்பிற்குரிய சாரிஜி மகராஜ் அவர்களால், லாலாஜி, பாபூஜி, அவருடைய அம்மா ஜானகி, மனைவி சுலோச்சனா மற்றும் சகோதரர் கோதாண்டராமனிடமிருந்து, நேரிடையாகப் பெறப்பட்ட செய்திகள் இடம் பெற்றுள்ளன. அவர் உரையாற்றுகையில், தொடரும் நம்முடைய ஆன்மீக வேட்கையில், நமக்கு வழிகாட்ட மாஸ்டராக, சகோதரர் கமலேஷ் அவர்களை, உயரிய குரு பரம்பரையினர் தேர்ந்தெடுத்தது மகிழ்ச்சியாகவும், பெருமையாகவும் உள்ளதெனவும், மாஸ்டர் நமக்கு சேவை செய்வதற்காக அல்லாமல், அவரைத் தேர்ந்தெடுத்த குரு பரம்பரையினருக்கு அவர் அளித்த வாக்கின்படி, அவர்களுக்கு சேவை புரியத்தான் என்பதனை நாம் நினைவில் கொள்ள வேண்டுமென்றும் கூறினார்.

சாரிஜி மகராஜ் பற்றி பேசுகையில், எவ்வாறு தம் தந்தை, தனக்கு என்ன நேர்ந்தாலும், மிஷனுக்கு சேவை புரிய ஒரு போதும் களைப்படைந்ததே இல்லை என்பதைப் பற்றிக் குறிப்பிட்டார். ஒளி உலகிலிருந்து மென்குரல்கள் புத்தகம் குறித்து பேசுகையில், இந்த செய்திகளை ஒன்றிணைத்து, நிறைய புகைப்படங்களுடன் சிறப்பு பதிப்பாக வெளியிட சாரிஜி விரும்பினார் என்று குறிப்பிட்டார். இந்த புத்தகம் உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கும்பொழுது, சாரிஜி, அவர் பெற்ற புதிய செய்திகளையும் மகிழ்வுடன் சேர்த்துக் கொண்டே இருந்தார். புத்தகத்தின் மாதிரி நகல் தயாரான பொழுது அவர் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

அதைத் தொடர்ந்து, பல வெளியீடுகள், நம் சகஜ மார்க்கக் குடும்பத்தின் குழந்தைகளால் வெளியிடப்பட்டன.

மாலை 5.30 மணி சத்சங்கத்திற்குப் பின், சகோதரி ரஞ்சனா மேத்தா பாடிய, இரு பஜனைப் பாடல்கள், விசேஷமான அந்த சூழ்நிலைக்கு மேலும் சிறப்பளித்தன. அதன் பிறகு, கம்லேஷ் பாய் உரையாற்றியபோது, நாமனைவரும் விமர்சனம் செய்யாமல் இருக்க வேண்டியதன் கட்டாயத்தேவை பற்றியும், நாமனைவரும் ஒரே குடும்பம் என்பதை அங்கீகரித்து, உணர வேண்டும் என்றும், மாஸ்டருடனான நிரந்தரமான உள்ளார்ந்த தொடர்பினை நிலைநாட்ட வேண்டும் என்றும் கூறினார்.

- அப்யாசிகளின் விமர்சனம் செய்யும் பழக்கம், தனக்கு தொந்தரவு அளிப்பதாகக் கூறினார். நாம் அனைவரும்








ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், எந்தவொரு குடும்பத்தையும் போல், நாம் ஒருவருக்கொருவர் கலந்து பேசி, ஒரு தீர்வை நாட வேண்டும் என்றும் அவர் சொன்னார். அன்பிற்குரிய சாரிஜியின் மகாசமாதிக்குப் பிறகு, ஏற்பட்ட பல மாற்றங்களைக் குறித்து, எல்லோரும் விமரிசனம் செய்வதைப் பற்றிக் கூறிய அவர், ஒவ்வொரு மாற்றமும், குரு பரம்பரையினரின் வழிகாட்டுதல்களின்படி தான் செயல்படுத்தப்பட்டு வருவதாக மிகவும் உறுதியாகச் சொன்னார்.

- மன உறுதியைப் பற்றிப் பேசும் போது அவர், நமக்குத் தேவையானதெல்லாம் ஆழ்ந்த விருப்பம் மட்டும் தான் என்றும், அதற்கான சக்தியை அவர் தருவார் என்றும் சொன்னார். நாம் செய்ய வேண்டியதெல்லாம், சாதிப்பதற்கான இந்த பலமான விருப்பம் அல்லது மன உறுதியை நிலை நாட்டிக்கொள்வது மட்டுமே ஆகும்.
- நாம் மாஸ்டரைப் போல ஆக வேண்டும் என்ற ஆசையை, ஆழமாக வளர்த்துக் கொள்ள வேண்டும். "என்னை உங்களைப் போல் மாற்றுங்கள்" என்று மட்டும் எண்ணுவது முட்டாள்தனம். ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும் போதும், நாம் எந்த மாற்றத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும், எந்தெந்த பலவீனங்களையெல்லாம் போக்கிக்கொள்ள வேண்டும் என்பதைப் பற்றி சிந்தித்து, அவற்றைச் செயல்படுத்தும் போது, மாஸ்டருடன் நமது தொடர்பை நிலையாக ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.
- மாஸ்டரின் தரிசனம் பெற வேண்டும் என்ற ஆர்வவெறியைப் பற்றிப் பேசும் போது, பாபூஜியைப் பார்க்க அநேகம் பேர் வந்தனர், ஆனால் அவரைப் பார்க்கவில்லை. இது பார்க்க வேண்டிய விஷயம் அல்ல, உள்ளத்துள் உணர வேண்டிய விஷயம் ஆகும் என்று அவர் சொன்னார்.

## மே 1, 2015

பண்டாராவின் இறுதி நாளின் ஆய்வுப் பொருள், "புனிதமான இறையன்பில் தன்னையிழத்தல்" என்பதாகும்.

சத்சங்கத்திற்குப் பிறகு, கம்லேஷ் பாய், பண்டாராக்களில் நாம் பெற்ற நிலைகளை நாமே கண்டறிந்து கொள்வதைப் பற்றிப் பேசினார். மேலும், பண்டாராக்களுக்கு நம்மைத் தயார்படுத்திக்கொள்ளுதல், நமது ஆசைகளைக் கடந்து நிற்றல், தியானத்திற்கென ஒரு குறிப்பிட்ட நேரத்தை நிர்ணயித்துக் கொள்ளுதல், மற்றும் திருவள்ளூரில் நடைபெறவிருக்கும் பண்டாராவில் இன்னும் நிறைய அப்யாசிகள் கலந்து கொள்வார்கள் என்ற தனது நம்பிக்கை, ஆகியவற்றைப் பற்றிப் பேசினார்.

அவர், தன்னார்வத் தொண்டர்கள், விழாக் குழுவினர், லக்னோ அப்யாசிகள், ஆசிரம மேலாளர், மற்றும் ஒன்று சேர்ந்து பணியாற்றி, இந்த பண்டாராவை நடத்த உதவி புரிந்த அனைவருக்கும் தனது நன்றியைத் தெரிவித்தார். திருவள்ளூரில் நடைபெறவிருக்கும் நமது அன்பிற்குரிய சாரிஜியின் 88 ஆவது பிறந்த நாள் விழாவில், அப்யாசிகள் முழு எண்ணிக்கையில் கலந்து கொள்ள வேண்டும் என்ற தனது அன்பான எதிர்பார்ப்பையும் அவர் தெரிவித்தார்.

இறுதி சத்சங்கத்திற்குப் பிறகு, மதிப்பிற்குரிய கம்லேஷ் பாய் விழாக் குழுவின் உறுப்பினர்களை காட்டேஜில் சந்தித்து, அவர்களது பங்களிப்பிற்காக தனது நன்றியைத் தெரிவித்து, அவர்களுடன் காலை உணவை உட்கொண்டார். காலை 10 மணிக்கு, SMSF அறங்காவலர்களின் குழுவுடன் ஒரு கூட்டம் இருந்தது. பின்னர், 11 மணியளவில், செயலாளர் குழுவினர்களைச் சந்தித்த பிறகு, அவர்களுடன் மதிய உணவை உட்கொண்டார்.

அப்யாசிகள் தங்களது வருகையைக் குறிக்கும் வகையில் Golden Bookல் கையெழுத்திடுவதற்காக, தன்னார்வத்தொண்டர்களின் 10 குழுக்கள், தங்குமிடங்களுக்குச் சென்று, அப்யாசிகளுக்கு இந்த பணியில் உதவினர். பிரார்த்தனை மற்றும்







எண்ணங்களைப் பற்றிய கம்லேஷ் பாய் அவர்களின் சமீபத்திய ஆலோசனைகள் அடங்கிய சுய விலாச அட்டை வடிவத்தில் அச்சிடப்பட்ட குறிப்புகளும், பாபூஜி மகாராஜ் எழுதியுள்ள, "தனி மனிதர் சிறப்பியல்பின் பிரச்சினைகள்" என்பதைப் பற்றிய குறிப்பேடுகளும் அப்யாசிகளுக்கு வழங்கப்பட்டன.

**குழந்தைகள் மற்றும் இளைஞர் மைய செயல்பாடுகள்**

பல்வேறு வயதுடைய குழந்தைகளுக்காக ஒரு குழந்தைகள் மையம் ஏற்படுத்தப்பட்டது. பெற்றோர்கள் எவ்வித இடையூறுமின்றி சத்சங்கத்தில் கலந்து கொள்ள ஏதுவாக இது காலை 6 மணி முதல் மாலை 7 மணி வரை செயல்பட்டது. பதிவு செய்திருந்த சுமார் 2800 குழந்தைகள், மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். உலகெங்கிலும் இருந்து வந்திருந்த குழந்தைகள், இதய வடிவிலான கட்-அவுட்களால் அந்த இடத்தை அலங்கரித்தனர். 'எளிமை' என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்பாடுகள் அனைத்தும் இருந்தன. அவர்களை மகிழ்விக்கவும், நன்னெறிகளை ஆழப் பதிய வைக்கவும் பல்வேறு செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் குழந்தைகளில் சிலர் தேர்ந்தெடுக்கப்பட்டு, பண்டாராவின் பொழுது நமது மிஷனின் பதிப்புகளை வெளியிடும் ஒரு நல்வாய்ப்பினை அவர்கள் பெற்றது, இதன் சிறப்பம்சங்களுள் ஒன்று. கம்லேஷ் பாய் அவர்களின் முன்னிலையில், நமது மிஷனின் பதிப்புகளை வெளியிடுவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட குழந்தைகள், இவ்வாய்ப்பு தங்களுக்கு கிடைத்தது குறித்து மிகவும் மகிழ்ச்சியடைந்தனர்.

மேல்தள தோட்டம் அமைத்தல் என்ற நிகழ்வுடன், ஒவ்வொரு நாளும் ஆரம்பிக்கப்பட்டது. குழந்தைகள், மண்ணைத் தயாரித்து, கன்றுகளை நடுவதில் ஈடுபட்டிருந்தனர். இதன் பின் இருந்த, 'பேசும் மரம்' நிகழ்ச்சியில், குழந்தைகள் அமைதியின் மூலம், செடிகளுடன் தொடர்பு கொண்டனர். தளர்வுபடுத்திக் கொள்ளும் பயிற்சியுடன், நிகழ்ச்சி துவங்கியது. 9-வது நியமத்தை மனனம் செய்யும் ஒரு நிகழ்வும் இருந்தது. ஏப்ரல் 30 அன்று, பாபூஜியின் வாழ்க்கையை குழந்தைகளுக்கு பழக்கப்படுத்தும் விதமாக, அவரது குழந்தைப் பருவத்தின் குறிப்பிட்ட சில முக்கியக் கருத்துக்கள் அடங்கிய ஒரு குறுந்தொகுப்பு காண்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து,"பாபூஜியின் வாழ்க்கை" என்ற வீடியோ ஒளிபரப்பு இருந்தது. லக்னோ நகரத்தைப் பற்றிய ஒரு சிறு தொகுப்பும் காண்பிக்கப்பட்டது. உத்திரப் பிரதேச சுற்றுலாத் துறை அமைச்சரகத்தின் சார்பில், பொம்மலாட்டக் கலைஞர்களும், மாயாஜாலக் கலைஞர்களும் ஏப்ரல் 29 மற்றும் 30 அன்று மதிய நேரங்களில், தங்களுடைய நிகழ்ச்சிகளின் மூலம் குழந்தைகளை மகிழ்வித்தனர். கான்பூர், விஜயவாடா, லக்னோ மற்றும் சென்னையிலிருந்து வந்திருந்த குழந்தைகளின் கலை





நிகழ்ச்சிகள் இருந்தன.

13-17 வயதுடைய பங்கேற்பாளர்கள், நாசா சர்வைவல் விளையாட்டில் கலந்து கொண்டு மகிழ்ந்தனர். 'இணைந்திருத்தல்,' 'மாஸ்டர் மீதான நம்பக்கையுடன்', 'அவரது மிஷனைப் பரப்புதல்', ஆகிய கருத்துக்களில் நிகழ்வுகள் இருந்தன. உரையாற்றியவர்கள், மாஸ்டரின் அனுபவங்கள், மற்றும் தங்களது அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டனர்.

மாஸ்டர் வழங்கிய ஐஸ்கிரீம் விருந்துடன், குழந்தைகள் மற்றும் இளைஞர் மைய நிகழ்ச்சிகள் நிறைவுற்றன.



## புதிய வெளியீடுகள்

### புத்தகங்கள்










ராம் சந்த்ராவின் படைப்புகளின் முழு தொகுப்பு பாகம்1 (தமிழ்)

கம்ப்ளீட் வொர்க்ஸ் ஆ~ஃப் ராம் சந்த்ரா பாகம் 4 ( ஹிந்தி)

தி ஸ்டோரி ஆ~ஃப் டிவைன் ரெவல்யூஷன் (ஆங்கிலம்)




கம்ப்ளீட் வொர்க்ஸ் ஆ~ஃப் ராம் சந்த்ரா பாகம் 5

( ஆங்கிலம், குஜராத்தி, ஹிந்தி, கன்னடம், மராத்தி, தமிழ், தெலுங்கு)

## MP3 ஆடியோ புத்தகங்கள்




விஸ்பர்ஸ் ~ஃப்ரம் த ப்ரைட்டர் வேர்ல்ட் (ஹிந்தி)




வாய்ஸ் ரியல் ஆங்கிலம்



கமென்ட்ரி ஆன் டென் மாக்ஸிம்ஸ் & எ'ஃபிகஸி ஆ'ஃப் ராஜ யோகா தெலுங்கு




கமென்ட்ரி ஆன் டென் மாக்ஸிம்ஸ் & எ'ஃபிகஸி ஆ'ஃப் ராஜ யோகா உருது

## புதிய வெளியீடுகள்

தொடர்ச்சி...




### MP3 ஆடியோ

ராகோங் கே ரங், மாலிக் கே சங்
ஹிந்தி

### ஆங்கில DVDக்கள்

ஃபிஃப்டி இயர்ஸ் ஆஃப் ஸ்ப்லென்டர்

க்லென்ன்லினெஸ் அன்ட் ப்யூரிடி

த யுனிவர்ஸ் இஸ் லவ்

எக்ஸ்பீரியன்ஸ் அன்ட் கண்டிஷன்

இவால்வ் வித் டைம்

ரீட் & என்ஜாய்

எ ஸீட் ஃபார் ஃப்யூச்சர்































### ஹிந்தி DVDக்கள்

சாதனா மே டூபியே

சகஜ் மார்க் கோ தில் ஸே அப்னாயியே

டென் மாக்ஸிம்ஸ் - ரிஷி ரன்ஜன்

To download or subscribe to this newsletter, please visit http://www.sahajmarg.org/newsletter/india For feedback, suggestions and news articles please send email to in.newsletter@srcm.org

© 2015 Shri Ram Chandra Mission ("SRCM"). All rights reserved. "Shri Ram Chandra Mission", "Sahaj Marg", "SRCM", "Constant Remembrance" and the Mission's Emblem are registered Trademarks of Shri Ram Chandra Mission.This Newsletter is intended exclusively for the members of SRCM. The views expressed in the various articles are provided by various volunteers and are not necessarily those of SRCM.